Registrar of News Paper for India Regn. No. 15261/2005 (R.Dis no.1834/04) Date of Publication : 1st Week of Every Month 4 Pages பக்கம் 1

# CVPA NEWS

A Monthly Newspaper (Tamil & English) for Video & Photographic Professionals

AN OFFICIAL NEWS MAGAZINE FROM CHENNAI VIDEO & PHOTOGRAPHER'S ASSOCIATION

Film - 17 Click - 4
JULY 2021 ₹ 1








கொரோனா பொது முடக்க காலத்தில் அத்தனை ஒளிப்படக் கலைஞர்களும் தொழில் செய்வதற்காக வந்த எல்லா வாய்ப்புகளையும் முழுவதுமாக இழந்து பெரும் துன்பத்தை அனுபவித்து வந்தனர். இதனால் வாழ்வாதாரம் இழந்த நமது ஒளிப்படக் கலைஞர்களுக்காக பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, சேப்பாக்கம் திருவல்லிக்கேணி சட்டமன்ற உறுப்பினர் திரு .உதயநிதி ஸ்டாலின் அவர்களையும், திருவெற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.பி.சங்கர் அவர்களையும், வணிகர் சங்க பேரவைத் தலைவர் திரு. விக்கிரமராஜா அவர்களையும் நமது சங்க நிர்வாகிகள் நேரில் சந்தித்துப் பேசினார்கள்

# கொரோனாவால் ஐந்து வருடங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்ட ஒளிப்பட தொழில்துறை?

கொரோனா தொற்று பரவலைத் தடுக்கும் விதமாக கடந்த ஒன்றரை வருடங்களாக அரசு ஊரடங்கு நீடித்தும், தளர்த்தியும் வருகிறது. இதனால் ஏராளமான தொழில்துறை நிறுவனங்கள் முடங்கும் சூழ்நிலை ஏற்பட்டது. குறிப்பாக புகைப்படக் கலைஞர்கள் ஊரடங்கிற்கு கட்டுப்பட்டு , அவர்கள் தொழில் செய்யும் இடமான போட்டோ ஸ்டுடியோ மற்றும் அலுவலகங்களை மூடுதுவம் திறப்பதுமாக நாட்களை கடத்திக் கொண்டு வந்தனர். இதனால் லட்சக்கணக்கான ஒளிப்படக் கலைஞர்கள் தங்கள் வாழ்வாதாரத்தை முற்றிலும் இழந்தார்கள். கொரோனா தொற்றுக்கு அச்சப்பட்டு பல்லாயிரக்கணக்கான திருமண நிகழ்ச்சிகள் தள்ளிப் போடபப்பட்டு விட்டன. பொது நிகழ்ச்சிகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டன. இதனால் ஒவ்வொரு ஒளிப்படக் கலைஞனுக்கும் தொழில் செய்வதற்கான அத்தனை வாய்ப்புகளும் கைநழுவிப் போய் விட்டன. மொத்தத்தில் கொரோனா பேரிடர் காலத்தில் 2 வருடத்திற்கான திருமணம் மற்றும் பொது நிகழ்ச்சிகளை ரத்து செய்துவிட்டு வீட்டிலேயே முடங்கி கிடக்கும் சூழ்நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. கொரோனா காலத்தில் அங்கொன்றும் இங்கொன்றுமாக வந்த திருமண ஆர்டர்கள் அப்படி ஒன்றும் வருமானத்தை அவர்களுக்கு ஈட்டித் தரவில்லை. இதனால் தேவையில்லாத அலைச்சலும் மன உளைச்சலும் தான் ஏற்பட்டது.

பொதுவாக ஒளிப்படக் கலைஞர்களுக்கு இது ஒரு ஒற்றைத் தொழிலாகவே இருக்கிறது. புகைப்படத் தொழிலைத் தவிர வேறு எந்த தொழிலும் இந்த கலைஞர்களுக்கு பெரும்பாலும் தெரிவதில்லை. இப்போது சந்தித்திருக்கும் பேரிடர் காலத்தை இதுவரை அவர்கள் கண்டதில்லை. தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான சின்னஞ் சிறிய போட்டோ ஸ்டுடியோக்கள் செயல்பட்டு வருகின்றன. இங்கு உள்ள ஒளிப்படக் கலைஞர்கள் தினசரி வருமானமாக நம்பியிருப்பது பாஸ்போர்ட் போட்டோ மட்டுமே. அப்படி கிடைத்து வந்த வருமானத்தில்தான் கொரோனா காலம் கோரத்தாண்டவம் ஆடி வருகிறது. முதல் அலையில் பட்ட கடன் சுமையை இறக்கி வைப்பதற்குள் இரண்டாம் அலை வந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது. எல்லோரும் உயிருக்கு பயந்து வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கின்றனர். இது போதாதென்று இன்னும் 18 மாதங்கள் (ஏற்கனவே ஒன்னரை வருடம், இது தவிர இன்னும் ஒன்னரை வருடம். ஆக மொத்தம் மூன்று வருடம்) மிகுந்த கவனத்துடன் இருக்கும்படி உலக சுகாதார அமைப்பு நம்மையெல்லாம் எச்சரித்து வருகிறது.

இத்தொழில் மீது நம்பிக்கை வைத்து ஒவ்வொரு வருடமும் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் விஸ்காம் படிப்பு முடித்து விட்டு ஆர்வத்துடன் இத்துறைக்கு வந்த வண்ணம் உள்ளனர். இப்படி படித்த இளைஞர் களும், பாமர மக்களும் விரும்பி ஏற்கும் ,ஒரு தொழிலாக ஒளிப்படத் துறை இருந்து வருகிறது. தெரிந்தோ தெரியாமலோ ஒளிப்பட தொழிலின் தற்போதைய மாற்றங்களுக்கு படித்த இளைஞர்களின் பங்கு மிக முக்கியமானதாக இருந்து வருகிறது. ஆனால் அவர்களும் கொரோனா அச்சத்தால் விலகிச் செல்லும் நிலை தற்போது ஏற்பட்டு வருகிறது.

கடந்த சில வருடங்களாக ஒளிப்பட தொழில்நுட்பத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தின் காரணமாக ஏராளமான இளைஞர்கள் நிறைய முதலீடு செய்து, மிரர்லஸ் ஃபுல் ஃபிரம் மற்றும் இதர உபகரணங்கள் வாங்கினார்கள். இதை சிலர் வங்கியில் கடன் பெற்று வாங்கினார்கள். இன்னும் சிலர் தனியாரிடம் பைனான்ஸ் வாங்கினார்கள். வாங்கிய கடனுக்கு இப்போது மாதத் தவணை கட்ட முடியாமல் அவர்கள் மிகவும் கஷ்டப்பட்டு வருகின்றனர். இதுதவிர ஸ்டூடியோ வாடகை , அலுவலக வாடகை , வீட்டு வாடகை, மின்சாரக்கட்டணம், டூ வீலர் லோன், என ஏகப்பட்ட மாதத்தவணை நெருக்கடியில் சிக்கித் தவித்து வருகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக பள்ளிக்கூடமே போகாமல் வீட்டுக்குள்ளேயே முடங்கிக் கிடக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தை நினைத்து மனம் நொந்து போயுள்ளனர். கஷ்டமான சூழ்நிலையிலும் முதல் அலையை எப்படியோ நமது ஒளிப்படக் கலைஞர்கள் சமாளித்து விட்டனர், இரண்டாம் அலையில் எண்ணற்ற சொந்தங்களை சகோதரர்களை நமது கலைஞர்கள் இழந்து நிற்கின்றனர். இதனால் எப்போதும் எதையும் தைரியத்துடன் எதிர்கொள்ளும் மனப்பக்குவம் கொண்ட நமது கலைஞர்கள், சோகத்தின் உச்சியில் தள்ளாடி நிற்கின்றனர். விரைவில் கொரோனா அச்சத்திலிருந்து மீண்டு வருவார்கள். தற்போதைய லாக் டவுன்கள் நமது கலைஞர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை கற்றுக் கொடுத்துள்ளது. ஒளிப்படக் கலைஞர்களிடம் உள்ள தன்னம்பிக்கையும் மன தைரியமும் எப்போதும் அவர்களுக்கு துணை நிற்கும். இத்தொழிலை இன்னும் 5 ஆண்டு காலத்திற்கு பின்னுக்கு தள்ளி விடாமல் நம்பிக்கையுடன் இருந்து தொழிலை நிச்சயம் முன்னேறுவார்கள் என்ற நம்பிக்கை எல்லோருக்கும் இருக்கிறது.

**சரவணன்**, தலைவர்

## ஒரு முக்கிய அறிவிப்பு

அன்பார்ந்த சங்க உறுப்பினர்களே!

வணக்கம். கொரோனா பெரும் தொற்றைத் தடுக்கும் விதமாக தமிழ்நாடு அரசு எடுத்து வரும் பாதுகாப்பு நடவடிக்கைகள் காரணமாக , நம் சங்க உறுப்பினர்களின் பாதுகாப்பு கருதி கடந்த 2020 ஜூலையில் நடைபெற இருந்த சங்கத் தேர்தலை நடத்த முடியாமல் ஒரு இக்கட்டான சூழ்நிலையில் இருந்து வருகிறோம். விரைவில் ஊரடங்கு நீக்கப்பட்டு, முழுமையான தளர்வுகளை அறிவித்து சகஜ நிலைக்கு திரும்பிய உடனே நமது சங்க தேர்தலை விரைவில் நடத்தி முடிக்க ஏற்பாடுகள் செய்யப்படும் .அது வரை சங்க உறுப்பினர்கள் நடப்பு நிர்வாகத்திற்கு முழு ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என கேட்டுக் கொள்கிறோம்.. தற்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ள புதிய உறுப்பினர்கள் சேர்க்கை மற்றும் ரெனிவலை தவறவிட்டவர்கள், மீண்டும் ஒரு வாய்ப்பை ஏற்படுத்தி தர வேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்கள். அதன் அடிப்படையில் செயற்குழு, நிர்வாக குழுவின் ஒப்புதலுடன் சங்க விதிகளுக்கு உட்பட்டு இந்தப் பணி நடந்து வருகிறது. இந்த அரிய வாய்ப்பை மீண்டும் சங்க உறுப்பினர்கள் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று கேட்டுக் கொள்ளப்படுகிறது. சங்கம் தொடர்பான உங்களுக்கு ஏற்படும் சந்தேகங்களை நிர்வாகிகள் என்கிற முறையில் அதை தீர்த்து வைக்க நாங்கள் தயாராக இருக்கிறோம். எதுவாக இருந்தாலும் எங்களிடம் நேரடியாக தொடர்பு கொண்டு பேசுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

இப்படிக்கு: **துரைபாபு**, செயலாளர்

# மிகுந்த எதிர்பார்ப்பு கேனான் ஈ ஓ எஸ் ஆர் 3

கேனான் நிறுவனம் ஏப்ரல் மாதத்தில் ஈ ஓ எஸ். ஆர் 3 கேமரா தொடர்பாக ஒரு டீசரை வெளியிட்டது. இது கெனான் யூசர்கள் மத்தியில் நல்ல வரவேற்பு பெற்றது. இருப்பினும் இந்த கேமரா குறித்து முழுமையான தகவல் அல்லது செயல்பாடுகள் குறித்து எதையும் அந்த நிறுவனம் வெளியிடவில்லை. இதனால் சமூக ஊடகங்களில் ஆர் 3 குறித்து உறுதிப்படுத்தப்படாத வதந்திகள் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்த நிலையில் கேனான் நிறுவனம் ஆர் 3 கேமரா குறித்து மீண்டும் ஒரு டிரைலரை வெளியிட்டு உள்ளது. அதனடிப்படையில் வெளியாகியுள்ள சில முக்கிய தகவல்களை இங்கே வெளியிடுகிறோம்.

கேனான் நிறுவனம் வெளியிடப் போகும் ஆர் 3 மிரர்லஸ் கேமரா வானது, கேனான் 1Dx மார்க்-3 கேமராவிற்கும், ஈ. ஓ. எஸ். ஆர்.5 கேமரா விற்கும் இடைப்பட்ட ஒரு கேமராவாக இருக்கும். டிஜி எக்ஸ் ஸ்டேக்கிடு சீமாஸ் இமேஜ் சென்சார் கொண்ட இது ஒரு ஃபுல் பிரேம் கேமராவாகவே இருக்கும். இந்த ஸ்டேக் கிடு இமேஜ் சென்சாரை கேனான் முதல் முறையாக அறிமுகம் செய்கிறது. இந்த சென்சார் வேகமான ரீட் அவுட்டை கொண்டு டேட்டாக்களை ஸ்கேன் செய்யும். மேலும் கேமரா பேனிங் செய்யும் சமயங்களில் ஏற்படும் ரோலிங் ஷட்டர் பிரச்சனையை பெருமளவு குறைக்கும் என தெரிகிறது.

கேனான் எப்போதும் தனது ஆட்டோ போக்கஸ் சிஸ்டத்தில் ஒரு புது வசதியை ஏற்படுத்திக் கொடுக்கும். அந்த வகையில் கேனான் ஆர்3 கேமராவில் ஆட்டோ ஐ பால் டிராக்கிங் எனும் புதிய போக்கஸ் வசதியை முதல் முறையாக அறிமுகம் செய்துள்ளது. இந்த சிஸ்ட்டமானது சப்ஜெக்ட்டை ஒருபுறம் டிராக் செய்தாலும், கேமராவை கையாளும் புகைப்படக் கலைஞரின் கண் விழிகளின் துல்லியமான அசைவுக்கு ஏற்றபடி போக்கஸ் செய்கிறது. இத்தொழில்நுட்பம் 1998-ஆம் ஆண்டு ஏற்கனவே பிலிம் கேமராவில் அறிமுகம் செய்யப்பட்டு பின்னர் அது விலக்கிக் கொள்ளப்பட்டது. இதுவே தற்போது மேம்படுத்தப்பட்டு கேனான் ஆர்3 மிரர் லெஸ் கேமராவில் அறிமுகமாகிறது என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் வேகமாக செல்லும் கார்கள் மற்றும் டூவீலர் பைக்குகள் ஆகியவற்றை விரைவாக போக்கஸ் செய்து போட்டோ எடுக்கும் வகையில் புதிய Artificial intelligence ஆட்டோ டிராக்கிங் சிஸ்டமும் இந்த கேமராவில் அறிமுகமாகிறது.

எலக்ட்ரானிக் ஷட்டரை பயன்படுத்தி ஒரு நொடிக்கு 30 போட்டோக்கள் வரை அதுவும் RAW போட்டோவாக எடுக்க முடியும். மேலும் இந்த எலக்ட்ரானிக் ஷட்டரை பயன்படுத்தும் போது ஃப்ளாஷையும் பயன்படுத்த முடியும். இது ஒரு பிரபஷனல் கேமராவாக இருப்பதால் CF எக்ஸ்பிரஸ் கார்டு மற்றும் SD கார்டு என இரண்டு விதமான டூயல் கார்ட் ஸ்லாட் உள்ளது. பொதுவாக CF எக்ஸ்பிரஸ் கார்டு என்பது வேகமாக செயல்படக்கூடியது. இது ஃபாஸ்ட் ஆக்சன் போட்டோகிராபர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இந்த கேமராவில் வீடியோவைப் பொருத்தவரை 4கே வீடியோவை ஓவர் சேம்பிளிங் மூலமாக கேமரா விலேயே இன்டர்ணல் ரெக்கார்டிங் செய்ய முடியும். கேனான் ஆர்3 ஆனது மொபைல் ஆப் மூலமாக டேட்டா டிரான்ஸ்பர் ஈதர்நெட் வழியாக வேகமாக செய்ய முடியும் எனத் தெரிகிறது. கேனான் ஆர்3 கேமராவின் அதிகாரபூர்வமான அறிமுகத்தை அனைவரும் எதிர்பார்த்து காத்துக் கொண்டிருக்கின்றனர்.

கேனான் நிறுவனம் ஆர் 5 கேமரா மற்றும் ஆர் 6 கேமராக்களின் வலுவான விற்பனையின் காரணமாக குறிப்பிடத்தக்க லாபம் ஈட்டியுள்ளது என அந்நிறுவனத்தின் செய்திக் குறிப்பு கூறுகிறது. டிஜிட்டல் கேமரா லென்ஸ், ஆர்5 மற்றும் ஆர்6 கேமராக்களில் வலுவான விற்பனையின் காரணமாக யூனிட் விற்பனை முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தை விட அதிகமாக இருந்ததாகவும் கெனான் நிறுவனம் கூறுகிறது. .

மக்கள் பெருந்தொற்றுக்கு இடையில், தொடர்ந்து கட்டுப்பாடுகளுடன் இருந்துவரும் நிலையில் கேமராக்களின் தேவையும் இருந்து வருகிறது. காரணம். உயர்தர காட்சி வெளிப்பாட்டின் தேவையால் கேமராக்கள் அதிகரிக்கப்படுகிறது. இது தவிர covid-19 காரணமாக ஆன்லைன் விற்பனை மூலம் கணிசமான லாபம் ஈட்ட முடிந்ததாக அந்நிறுவனம் தெரிவிக்கிறது. கேனான் ஆர் சிரீஸ்ஸை அதிகரித்து தனது சந்தையை விரிவுபடுத்தி விற்பனையை அதிகரிக்கவும் கேனான் நிறுவனம் திட்டமிட்டுள்ளது

# ஐ. நா சபை பன்னாட்டு புகைப்படப் போட்டி

ஐக்கிய நாடுகள் அவையின் ஆதரவு திட்டமான மனித நேயத்திற்கான புகைப்படம் எடுத்தல் ( போட்டோகிராபி 4 ஹியூமானிட்டி) எனும் பன்னாட்டுப் பரிசுப் போட்டிக்கான அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. உலகமெங்கும் இருக்கும் புகைப்படக் கலைஞர்களிடம் உள்ள ஆர்வத்தை புகைப்படங்கள் வாயிலாக மனித உரிமைகளின் சக்தியை உயிர்ப்பிக்க முடியும் என்பதை உணர்த்துவதற்காக இப்போட்டி அமைக்கப்படுகிறது.

துணிவு மனத்தளர்வு நம்பிக்கை அநீதி கருணை மனித உரிமை தோல்விகள் அல்லது சிறிய மற்றும் பெரிய வழிகளில் வெற்றி வாய்ப்பினை எடுத்துக்காட்டுவது என்று இப்படங்கள் மனித உரிமைக்கான ஒரு நிலைப்பாட்டை எடுக்க மக்களை ஊக்குவிப்பதற்காகவும் தனிப்பட்ட முறையில் செயல்பட வைப்பதாகவும் அமைகின்றன.

மேற்காணும் நோக்கங்களை முதன்மை கருவாக கொண்டு எடுக்கப்பட்ட புகைப்படங்களுடன் இப்போட்டியில் பங்கேற்க முடியும். புகைப்படம் எடுத்தலில் ஆர்வமுடையவர்கள் மற்றும் தொழில் முறையிலான, புகைப்படக் கலைஞர்கள் என்று 18 வயது நிறைவு செய்த அனைவரும் இப்போட்டியில் பங்கேற்க முடியும். இப்போட்டிக்காக எடுக்கப்பட்ட புகைப்படங்கள் 1.9.2020 முதல் 15.8.2021 வரையிலான காலத்தில் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும், இப்போட்டிக்கு நுழைவுக் கட்டணம் எதுவும் இல்லை. இப்போட்டியில் பங்கேற்கும் ஒருவர் 5 புகைப்படங்கள் வரை சமர்ப்பிக்க முடியும். ஒவ்வொரு புகைப்படத்திற்கான தலைப்பு, நாள், எடுக்கப்பட்ட இடம், மற்றும் புகைப்படம் எடுத்தவரின் பெயர் போன்றவை இருக்க வேண்டும். புகைப்படங்களை சமர்ப்பிக்க கடைசி நாள் 15 .8 . 2021

இப்போட்டியில் பங்கேற்கும் அனைத்து புகைப்படங்களையும் உலகின் மிகச்சிறந்த புகைப்படக்காரர்கள், மனித உரிமை வல்லுனர்கள் பத்திரிக்கையாளர்கள் மற்றும் புகைப்படத் தொகுப்பாளர்கள் உள்ளிட்ட பதினோரு பேர் கொண்ட நடுவர் குழு பரிசீலித்து உலகளாவிய நிலையில் பரிசுக்குரிய ஒருவரையும் காட்சிப் படுத்துவதற்கு ஏற்ற மிகச்சிறந்த 10 புகைப்படங்களையும் தேர்வு செய்து கொடுக்கும்.

பரிசுக்கு தேர்வு செய்யப்பட்டவர்கள் மற்றும் காட்சிப் படுத்துவதற்காக தேர்வு செய்யப்பட்ட 10 புகைப்படங்கள் போன்றவை குறித்த அறிவிப்பு ஐக்கிய நாடுகள் அவையின் மனித உரிமையின் நாளான டிசம்பர் பத்தாம் நாளில் வெளியிடப்படும்

பரிசுக்கு தேர்வு செய்யப் பெற்றவருக்கு 5 ஆயிரம் அமெரிக்க டாலர் பரிசுத் தொகையாக வழங்கப்படும்.

பரிசுக்கு தேர்வு செய்யப்பட்ட புகைப்படத்துடன் மிகச்சிறந்த புகைப்படங்களாக தேர்வுசெய்யப்பட்ட 10 புகைப்படங்களும் நியூயார்க் நகரில் அமைந்திருக்கும் ஐக்கிய நாடுகள் அவையின் தலைமை அலுவலகத்திலும் நியூயார்க் நகரில் இருக்கும் போட்டோகிராபி ஃபிக்சா அலுவலகத்தின் கண்காட்சி அரங்கில் காட்சிப்படுத்தப்படும்
இப் போட்டியில் பங்கேற்கவும், கூடுதல் தகவல்களை தெரிந்து கொள்ளவும், https ://www.photography4humanity.com எனும் இணைய முகவரிக்கு செல்லவும்

CVPA NEWS (Tamil & English ) Monthly Newspaper,
RNI No. 15261 /2005 (R.Dis no.1834/04)
Published by B.SRIDAR, on behalf of
Chennai Video & Photographers' Association,
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2.
Ph: 2860 7821 Email : cvpanews2019@gmail.com,
Website : www.cvpa.in
Printed by M.NAVANEETHAN, at Nava Jothi Achagam,
No.8. Mukharunnissa Begum St, Ellis road, Chennai-2.
Editor : B.SRIDAR, Mobile: 8015170351

If undelivered please return to
**Chennai Video & Photographers' Association,**
at 51/24, Bangaru Street, Ellis Road, Chennai-2. Ph: 28607821

Postal Registration no TN/ARD/11/2021-2023
WPP License No: TN/PMG/CCR/WPP 557/2021-2023
Posted at Egmore RMS/I (Partika Channel) Posted on 14.07.2021

To,